தினமலர்

நெல்லை

வெள்ளி ■ ஆகஸ்ட் 9, 2019 www.dinamalar

# பாளை., சாரதா கல்லூரியில் யு.ஜி.சி., குழுவினர் ஆய்வு

திருநெல்வேலி, ஆக. 9—

பாளை., சாரதா கல்லூரியில் யு.ஜி.சி., குழுவினர் ஆய்வு செய்தனர்.



பாளை., சாரதா கல்லூரியில் யு.ஜி.சி., குழுவினர் ஆய்வு செய்தனர்.

பாளை., சாரதா கல்லூரி தன்னாட்சி அந்தஸ்து வழங்குவதற்காக பல்கலைக்கழக மானியக்குழுவிடம் (யு.ஜி.சி.,) விண்ணப்பம் செய்துள்ளது. கல்லூரிக்கு தன்னாட்சி அந்தஸ்து வழங்குவதற்காக யு.ஜி.சி., குழுவினர் நேற்று முதல் தங்களது ஆய்வை துவக்கினர். ராஜஸ்தான் பிகானிர் எம்.ஜி.எஸ்., பல்கலை., முன்னாள் துணைவேந்தர் சந்திரகலா படியா தலைமையில், தெலுங்கானா, செகந்தராபாத் பாரதிய வித்யா பவன்ஸ் விவேகானந்தா அறிவியல் கல்லூரி முதல்வர் அசோக், மத்திய பிரதேசம் போபால் மவுலானா ஆசாத் தேசிய தொழில்நுட்ப நிறுவன பேராசிரியர் சுஷி ஸ்ரீவஸ்தாவா, யு.ஜி.சி., கீழ்நிலை செயலர் சுரேஷ் ராணி, நெல்லை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் மைதிலி, நெல்லை பல்கலை., பேராசிரியர்கள் லோகநாதன், மரிய ஆரோக்கிய ராணி சாரதா கல்லூரியில் ஆய்வு செய்தனர். ஆய்வின் போது ராமகிருஷ்ண தபோவன துணை தலைவர் சுத்தானந்தா சுவாமிகள், செயலர் சத்யானந்த சுவாமிகள், கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணபவப்ரியா அம்பா, முதல்வர் மலர்விழி, இயக்குனர் சந்திரசேகரன் உடன் இருந்தனர். ஆய்வு குழுவினர் கல்லூரியின் செயல்பாடு, மாணவிகள், பேராசிரியர்களுடன் கலந்துரையாடினர். தொடர்ந்து கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டனர்.